# திருவே திருப்பலி பொருள்தனையே

திருவே திருப்பலி பொருள்தனையே
உன் திருக்கழல் வணங்கித் தருகின்றோம்
திருக்கழல் வணங்கித் தருகின்றோம்-( 2 )

**1)**
ஒளிரும் தணலில் உனதெழில் வடிவை
உணர்ந்திடப் புகுந்தோம் அன்பாக - 2
புரிந்திடும் வேள்வி விழைந்திடும் ஒளியில்
புவிதனைப் படைத்தோம் பலியாக - 2

**2)**
ஏழையர் வழங்கும் உளமெனும் தீபம்
எரிந்திட உனதருள் கனல் வேண்டும் -2
உலகில் இருளில் விடுபட என்றும்
உன்னிடம் சரணம் பெறவேண்டும் - 2